செ.வெ.எண்.28 நாள் : 22.04.2017

# அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இடுபொருட்கள் மானியம், குடிநீர் வழங்கல் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி.எஸ்.வளர்மதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இடுபொருட்கள் மானியம், குடிநீர் வழங்கல் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் **மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி.எஸ்.வளர்மதி** அவர்கள் மற்றும் முதன்மை செயலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர் **திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப.,** அவர்கள் ஆகியோர் தலைமையில், அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் இன்று (22.04.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், **ரூ.20.48 கோடி** இடுப்பொருட்கள் மானியம், **49,481** விவசாயிகளுக்கு அவர்களது வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுவிட்டது. நகர்புறம் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் தினசரி தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மற்றும் மாநில பேரிடர் மீட்பு நிதியின் கீழ் **ரூ.1.62 கோடியில்** 45 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றில் 37 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 8 பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்ட பொதுநிதியிலிருந்து 2.48 **கோடியில்** 77 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 41 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 36 பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் **ரூ.79 கோடி** நடப்பு நிதியாண்டிற்கு பெறப்பட்டு அனைத்து ஊராட்சிகளிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்நடைகளுக்கு போதிய தீவனங்கள் உள்ளன. 5 தீவன கிடங்குகள் ரூ.91 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு கால்நடை தீவனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், குடிமராமத்து பணிகள், தடுப்பணைகள் கட்டுதல் மற்றும் ஏரி, குளங்கள் ஆழப்படுத்துதல் உள்ளிட்ட 99 வறட்சி நிவாரண பணிகள் **ரூ.6.63 கோடி** மதிப்பீட்டில் பல்வேறு துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ,ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, **மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி.எஸ்.வளர்மதி** அவர்கள் சீரான குடிநீர் வழங்க நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும், குடிநீர் பணிகள் மற்றும் வறட்சி நிவாரண பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும் எனவும், குடிநீர் அவசர காலத்திட்டத்தை தயார் நிலையில் வைக்குமாறும் மாவட்ட ஆட்சியருக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், ஜெயங்கொண்டம் சட்ட மன்ற உறுப்பினர் திரு.ஜே.கே.என்.இராமஜெயலிங்கம், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.இராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தனசேகரன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.லோகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரெங்கராஜன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் திரு.பழனிசாமி, கோட்டாட்சியர்கள் (அரியலூர்) திரு.மோகனராஜன், (உடையார்பாளையம்) திருமதி.டினாகுமாரி, அனைத்துத்துறை அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர்.**